சுருக்கம்

பள்ளிக் கல்வி – கணினி கல்வித் திட்டம் - அரசு/மாநகராட்சி/நகராட்சி – மேல்நிலைப் பள்ளிகளுக்கு கணினி வாங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (மேநிக2)துறை

அரசாணை (நிலை) எண்.3 நாள் 5.1..2007

படிக்கப்பட்டது:-

1) தமிழ்நாடு மின்னனுவியல் நிறுவன மேலாண்மை இயக்குநரின் கடிதம் எண். எல்காட் / Proc/ பள்ளிகள்/ 2006-07, நாள். 3.10.2006.
2) அரசாணை (நிலை) எண். 187, பள்ளிக் கல்வி, நாள் 4.10.2006.
3) அரசாணை (வாலாயம்) எண். 309, பள்ளிக் கல்வி, நாள்.5.10.2006.

----

**ஆணை:**

பள்ளிக் கல்வித் துறையில் மேல்நிலைப் பள்ளிகளில் 11 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கு கணினிக் கல்வி முதற்கட்டமாக 1999-2000ம் கல்வி ஆண்டு முதல் 666 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும், 2ம் கட்டமாக 2000-2001 கல்வியாண்டில் 531 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் தமிழ் நாடு மின்னனுவியல் நிறுவனத்தால் நியமிக்கப்பட்ட 43 ஒப்பந்தக்காரர்கள் மூலம் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்ட கணினி ஆசிரியர்கள் மூலம் கணினி அறிவியல் பாடம் கற்பிக்கப்பட்டு வந்தது. ஒப்பந்த காலம் முடிவுற்ற பின்னரும் புதிய ஒப்பந்தப் புள்ளி இறுதி செய்யப்படும் வரை மாணவர்கள் நலன் கருதி ஒப்பந்தம் முடிந்து அப்பள்ளிகளில் பணிபுரிந்து வரும் கணினி ஆசிரியர்கள் கணினி வகுப்புகளை தொடர்ந்து நடத்த அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

2. 24.5.2006 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஆளுநர் உரையில் "வரும் 3 ஆண்டுகளில் படிப்படியாக அனைத்து பள்ளிகளுக்கும் கணினி வழங்கப்படும்" என அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 4.8.2006 அன்று பள்ளிக் கல்வி மான்யக் கோரிக்கை மீதான விவாதத்தின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பின்வரும் அறிவிப்பை வெளியிட்டுள்ளார்:-

"அரசு மேல்நிலைப் பள்ளிகளில் தற்போது தொகுப்பூதியத்தில் முற்றிலும் தற்காலிக அடிப்படையில் கணினி ஆசிரியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இவ்வாசிரியர்களின் கோரிக்கையை அரசு ஏற்று, முழு கல்வித் தகுதியோடு பணிபுரியும் கணினி ஆசிரியர்களை போட்டித் தேர்வின் மூலம் முறையான ஊதிய விகிதத்தில் பணி நியமனம் செய்ய பரிவுடன் பரிசீலனை செய்ய முடிவெடுத்துள்ளது. "

3. இவ்வறிவிப்பினைத் தொடர்ந்து அனைத்து அரசு/ /நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் கணினிக் கல்வித் திட்டத்தை செயல்படுத்தலாம் என்றும்,

இத்திட்டத்தின் கீழ் ஆசிரியர்களை அரசே நியமிக்கலாம் என்றும் முடிவு எடுக்கப்பட்டது. அதற்கேற்ப தற்போதுள்ள 1880 அரசு/ /நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளிலும் பள்ளி ஒன்றுக்கு ஒரு கணினி பயிற்றுநர் வீதம் 1880 கணினி பயிற்றுநர் பணியிடங்கள் தோற்றுவித்து மேலே (2)ல் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டுள்ளது இதனையொட்டி தற்போது பணியாற்றி வரும் கணினி பயிற்றுநர்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் தனித் தேர்வு நடத்தி முறையாக நியமனம் செய்வது குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4. மேற்கூறிய நிலையில், தமிழ்நாடு மின்னனுவியல் நிறுவனம் மூலம் மேல்நிலைப் பள்ளிகளுக்கான கணினிகளை வாங்கலாம் என்றும், இவற்றை பள்ளிகளில் நிறுவுவது தொடர்பான பணியை அந்நிறுவனத்திற்கே அளிக்கலாம் என்றும் முடிவு செய்யப்பட்டது. இது குறித்து தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேலாண்மை இயக்குநரிடமிருந்து தொழில் நுட்பம் சார்ந்த குறியீடுகளும் (Technical specification) மற்றும் இது குறித்த விலை மதிப்பீடுகளும் (Cost Estimate) பெறப்பட்டன. பின்னர் மேலே 3ல் படிக்கப்பட்ட அரசாணையில் வல்லுநர் குழு ஒன்று அமைக்கப்பட்டு கணினி குறித்த தொழில்நுட்பம் சார்ந்த குறியீடுகள் குழுவின் பரிசீலனைக்கு அனுப்பப்பட்டன. வல்லுநர் குழு ஒப்புதலளித்தவாறு தொழில்நுட்பம் சார்ந்த குறியீடுகள் மீண்டும் தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

5. இப்பொருள் குறித்து பரிசீலித்து அரசு/ நகராட்சி/ மாநகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினிக் கல்வித் திட்டத்தை செயல்படுத்த ஏதுவாக தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம் மூலம் கணினி மற்றும் கணினி சார்ந்த பொருள்களை வாங்கலாமென்றும் மற்றும் பள்ளிகளில் அவற்றை நிறுவும் பொறுப்பை இந்நிறுவனத்திற்கே வழங்கலாம் எனவும், அரசு முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடுகிறது.

6. மேற்சொன்னவாறு கணினிக் கல்வித் திட்டத்தை செயற்படுத்த ஏதுவாக ரூ.118,15,31,000/- (நூற்றுப் பதினெட்டு கோடியே பதினைந்து இலட்சத்து முப்பத்து ஓராயிரம் மட்டும்) ஒப்பளிப்பு செய்தும் அரசு ஆணையிடுகிறது. இந்தச் செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்புக்களில் பற்று வைக்கப்படும்:-

i) மொத்த செலவினத்தில் 80 சதவிகிதம் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்:-

2202 பொதுக் கல்வி- 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் JX மேல்நிலைப் பள்ளிகளில் கணினி சாதன வசதியளித்தல் -76 கணினியும் துணைப்பாகங்களும் - 01 வாங்குதல்.
(த.தொ.கு.2202-02-109- JX-7615).

ii) 20 சதவிகிதம் செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படும்.
2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 789 ஆதி திராவிடர்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டம் - பத்தாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள்-II மாநிலத் திட்டம் - JA மேநிலைப் பள்ளிகளில் கணினி சாதன வசதியளித்தல் 76 கணினியும் துணைப் பாகங்களும் - 01 வாங்குதல்.
(த.தொ.கு.2202-02-789-JA-7611)

7. மேலே பத்தி 5ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில் கணினி உபகரணம் வாங்குவதற்கு புதிய ஒப்பந்தப் புள்ளிகளைக் கோர நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவன மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இச்செலவினத்திற்கான நிதியொதுக்கம் 2006-07 திருத்திய மதிப்பீடு/ இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் மேற்கொள்ளப்படும். இதனை எதிர்நோக்கி, உரிய அலுவலரால் சமர்ப்பிக்கப்படும் சார்ந்த பட்டியல்களை, அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் அனுமதிக்குமாறு உரிய சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார். இச்செலவினத்திற்குத் தேவையான நிதியொதுக்கக் கருத்துருக்களை உரிய காலத்தில் 2006-07 திருத்திய மதிப்பீடு/இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கத் தக்க வகையில் அரசுக்குத் தவறாது சமர்ப்பித்திட பள்ளிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்.

9. இவ்வரசாணை நிதித் துறை அ.சா.எண்.82473/கல்வி-II/2006, நாள் 5.1.2007ல் பெறப்பட்ட அத்துறையின் இசைவுடன் வெளியிடுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1320.(ஆயிரத்து முன்னூற்று இருபது.

(ஆளுநரின் ஆணைப்படி)

எம். குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை.6
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணுவியல் நிறுவனம்,
சென்னை-35.
மாநில கணக்காயர், சென்னை.18
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை. 35
நகல்
நிதித் (கல்வி-II/ வ.செ.தி. பொ- II)துறை, சென்னை.9
தகவல் மற்றும் தொழில்நுட்பத் துறை, சென்னை.9.

/ ஆணைப்படி / அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்